


– வாழ்வோம்

அயராத தளகர்த்தர் தி.கு.சண்முகம்



1960-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை மூன்று நாட்கள், குமாரபாளையத்தில் கழகத்தின் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாநிலத்துக்கு உடனடியாக'தமிழ்நாடு' என்று பெயரிடுமாறு ஆட்சியாளர்களை மீண்டும் வலியுறுத்தி, அந்தச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய எல்லைப் பிரச்சினை, இந்தித் திணிப்பு எதிர்ப்பு என மிக முக்கியமான தீர்மானங்களும், கழகம் அமைத்த நிலச்சீர்திருத்தக் குழுவின் அறிக்கையும் அந்தப் பொதுக் குழுவில்தான் முன்வைக்கப்பட்டன. கழகத்தின் அமைப்பு முறைப்படி, அந்த நிகழ்ச்சி நிரலில் குமாரபாளையம் கிளைச் செயலாளர் என்கிற முறையில் கையொப்பமிட்டவர், தி.கு.சண்முகம். மாவட்டக் கழகத்தினருடன் இணைந்து, அந்த மாபெரும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்களில் ஒருவர். அடிமட்டத் தொண்டனாக இருந்து, அண்ணாவின் முன்னிலையிலேயே பாராட்டுப் பெற்றவர். 'குமாரபாளையத்தின் கழகப் பெருமகன்' என கலைஞர் பாராட்டிய உடன்பிறப்பு. தி.கு.ச. என்றால், அப்பகுதிக் கழகத்தினர் நன்கு அறிவர்.

1934 - ஆம் ஆண்டு பிறந்தவர், இளம் வயதிலேயே திராவிட இயக்கப் பற்றுக்கொண்டு செயல்படத் தொடங்கியவர். கழகம் துவக்கப்பட்டபோது இணைந்து பயணிக்கலானார். நெசவாளர் குடும்பம். பெற்றோர் குருசாமி - உண்ணாமலை அம்மாள். 1960-களிலேயே குமாரபாளையம் கிளைக் கழகச் செயலாளராகச் சிறப்புடன் செயல்பட்டவர். அவர் நடத்திவந்த தேநீர்க் கடைதான் கழக அலுவலகம். அதன் பின்னர், வட்டக் கழகச் செயலாளர், ஒன்றியக் கழகப் பிரதிநிதி, மாவட்டக் கழகப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், பேரூர் கழகப் பிரதிநிதி, பள்ளிபாளையம் ஒன்றியக் கழகச் செயலாளர் என அடுத்தடுத்து கழகப் பொறுப்புகளில் தன்னலம் பாராது பணியாற்றியவர். அதன்பின்னர், குமாரபாளையம் நகரச் செயலாளராக 30 ஆண்டுகள் அயராது பாடுபட்டவர். சேலம் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் துணைச் செயலாளராகவும் இருந்தவர். நாமக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், ஒருங்கிணைந்த மாவட்டக் கழக அவைத் தலைவராக இருந்தார்.

அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில், சேலம் சித்தையன், கே.கே. வீரப்பன், செ.கந்தப்பன் உள்ளிட்ட முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர். குமாரபாளையத்தில் கழகத்தின் கொள்கை வீரர் ஜே.கே.கே.சுந்தரம் அவர்களுடன் இணைந்து பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்.

183
உடன்பிறப்பே

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த தி.கு.சண்முகம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

'விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம்', 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்', 'மிசா', 'இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம்', 'சட்ட நகல் எரிப்புப் போராட்டம்' எனக் கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறைவாசம் அனுபவித்தவர்.

1975-ஆம் ஆண்டில், இவர் குமாரபாளையம் நகரக் கழகச் செயலாளராக இருந்தபோது, 1975-இல் கழகத்துக்குச் சொந்தமாக இடம் வாங்கி, கழக அலுவலகம் கட்டினார். வட்டச் செயலாளராக இருந்தபோது, பேரறிஞர் அண்ணா உள்ளிட்டோரை அழைத்துவந்து கூட்டங்கள் நடத்தியதைப்போல, ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்த காலங்களில்.. கலைஞர், பேராசிரியர் ஆகியோரை அழைத்து பொதுக்கூட்டங்கள் நடத்தியவர். நகரச் செயலாளராக இருந்தபோது, நகரத்தின் அனைத்து வார்டுகளிலும் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தினார்.

குமாரபாளையம் நகரத்தில் கழகம் செல்வாக்குப் பெறுவதற்கு, அவரது பிரச்சாரப் பணிகள் அடித்தளமாக அமைந்தன. குறிப்பாக, மூன்று உள்ளாட்சித் தேர்தல்களில் குமாரபாளையம் நகரத்தில் கழகம் தொடர்ச்சியாக வெற்றிபெற்றதற்குப் பின்னால், மக்களுடன் அவர் கொண்டிருந்த நெருக்கமும் அயராத உழைப்பும் காரணமாக இருந்தன. அந்த வெற்றிகளைப் பாராட்டியுள்ள கலைஞர், 'தன்னலம் கருதாத தளகர்த்தர்' என அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாராட்டியுள்ளார்.

திருச்செங்கோடு வெற்றிகள்

1967-ஆம் ஆண்டில், திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் பேராசிரியர் அன்பழகன் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்காக அயராது பாடுபட்டவர். 1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிட்ட செ.கந்தப்பன் அவர்கள், 60 சதவிகித வாக்குகளுடன் பெருவெற்றி பெற்றதற்குப் பின்னால், சண்முகம் அவர்களின் உழைப்பும் இருந்தது.

தி.கு.சண்முகம் அவர்கள் பள்ளிபாளையம் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, பள்ளிபாளையத்தில் இயங்கிவந்த 'சேசாயி பேப்பர் ஆலை போராட்டம்' நடைபெற்றது. தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் கழகத்தின் சார்பில் களத்தில் நின்று, தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்டினார்.

1977-ஆம் ஆண்டில், 'மிசா' சிறைக்குப் பின்னர் கழகம் சந்தித்த தேர்தலில், திருச்செங்கோடு தொகுதியில் கழகத்தின் வேட்பாளராக சண்முகம் அவர்களைக் களமிறக்கினார் கலைஞர். ஆனால், அன்றையச் சூழலில் திருச்செங்கோடு தொகுதியில் கழகம் வெற்றிவாய்ப்பை இழந்தது. எனினும் வழக்கம்போல தனது மக்கள் பணிகளில் எந்தத் தேக்கமும் இல்லாமல் அதே ஆற்றலுடன் பணியாற்றினார். இடைவெளியில்லாமல் அவர் ஆற்றிய மக்கள் பணியே, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் கழக வேட்பாளர் எம்.கந்தசாமியின் வெற்றியை உறுதிசெய்தது.

மூத்தவர்களுடன், இளையவர்களுடன் இணைந்து பணியாற்றியவர், தி.கு.சண்முகம். வீரபாண்டி ஆறுமுகம், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டச் செயலாளராக இருந்தபோது, இவர் துணைச் செயலாளராக அவருக்கு பக்கபலமாகத் துணை நின்றவர். நாமக்கல் மாவட்ட அவைத் தலைவராக இளைஞர்களுக்குத் தனது அனுபவங்களையும் ஆலோசனைகளையும் அளித்துவந்த தி.கு.சண்முகம் அவர்கள், தனது 90-வது வயதில், 2023-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

திராவிட இயக்க ஏடுகளை வாசிக்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே, பல பத்திரிகைகளையும் குமாரபாளையத்துக்கு வரவழைத்து, கழகத்தினருக்கு வழங்கியவர். 'திராவிட நாடு', 'மாலைமணி', 'மன்றம்', 'காஞ்சி', 'தென்னரசு' எனப் பல ஏடுகளும் அவரது தேநீர்க் கடை வழி கழகத்தினருக்குச் சென்று சேர்ந்தன. தனது இறுதிக்காலம் வரை 'முரசொலி' ஏட்டின் முகவராகவும் இருந்து, கழகக் கொள்கைகளை இளையோருக்குக் கொண்டுசேர்ப்பதில் உறுதியுடன் நின்றார். அவர் காட்டிய உறுதியினை நாமக்கல் மாவட்டக் கழகத்தினர், குமாரபாளையம் நகரக் கழகத்தினர், என்றும் உயர்த்திப்பிடிப்பர்; அவர் நினைவுகளைப் போற்றி நிற்பர்.

...துடிக்கும்

நீரை.மகேந்திரன்

குத்துச்சண்டை வீராங்கனையான ரோஷினி, த.வெ.க. ஆட்சியில் தனக்கு ஊக்கத்தொகை கிடைக்கவில்லை என யூடியூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டி, சமூக வலைதளங்களில் வைரலானது. `திராவிட மாடல் ஆட்சி'யில் கழக இளைஞர் அணிச் செயலாளர் விளையாட்டுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, ஒவ்வொரு வீரரையும் அடையாளம் கண்டு, முறையாக ஊக்கத்தொகைகள் வழங்கப்பட்டுவந்தன. ஆட்சி மாறிய ஆறே மாதங்களில் நிலைமை தலைகீழாகிவிட்டது எனக் கூறியதற்கு, சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

தகவல் நம்பகத்தன்மைப் பிரிவே பொய்யைப் பரப்புவதா?

அண்மைக்காலத்தில் பதக்கங்கள் வென்ற அனைத்து வீரர்கள் - வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும் என தமிழ்நாடு மேம்பாட்டு ஆணையம் விளக்கமளித்து, இதுவரை ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், இத்தகவலைப் பகிர்ந்துள்ள தமிழ்நாடு அரசின் தகவல் நம்பகத் தன்மைப் பிரிவு, `தவறான தகவலைப் பகிராதீர்' என நியாயமான கோரிக்கையைக்கூட பொய்யாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதைச் சுட்டிக்காட்டியுள்ள அயன் கார்த்திகேயன், ``தேசிய அளவில் தங்கம் வென்ற ரோஷினி என்ற குத்துச்சண்டை வீராங்கனை, ஒரு நேர்காணலில்... தமிழ்நாடு அரசு சார்பில், தனக்குத் தரவேண்டிய ரூ. 2 இலட்சம் ஊக்கத்தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று SDAT-யும் விளக்கம் அளித்துள்ளது. அவ்விளக்கத்தைக் கொண்டு, ரோஷினி பேசுவது `MISLEADING' எனத் தகவல் நம்பகத்தன்மைப் பிரிவு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில், யார் `MISLEAD' செய்கிறார்கள்? `தனக்கான ஊக்கத்தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது எப்படி `MISLEADING' ஆகும்?' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

`உண்மை சரிபார்ப்பகமே பொய்யைப் பரப்பும் கொடுமை, இந்த த.வெ.க. ஆட்சியில்தான் நடக்கும்' என்றும் சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஃப்ளாஷ்பேக்



மூத்த முன்னோடிக்கு மரியாதை!



இரா.கவிதா

07.11.2001 அன்று, அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் கழக முன்னோடிகளில் ஒருவரான கொல்லுமாங்குடி 'மிசா' வரத.கோபாலகிருஷ்ணன் அவர்கள் காலமானார். அவரது மறைவையொட்டி, கொல்லுமாங்குடிக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் மற்றும் இனமானப் பேராசிரியர் அவர்களும் வந்திருந்து, வரத.கோபால கிருஷ்ணன் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். அப்போது, அவரது குடும்பத்தினருடன் அன்றைய திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைச்செல்வன், நாகை ஏ.கே.எஸ். விஜயன், என் கணவர் வழக்கறிஞர் மு.ராம்மோகன்ராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தலைவரும் பேராசிரியரும் கொல்லுமாங்குடிக்கு வந்து, தொண்டர் இல்லத்தின் துன்பத்தைப் பகிர்ந்துகொண்டது, என்றென்றும் நினைவை விட்டு அகலாது.

– இரா.கவிதா, மேனாள் அரசு வழக்கறிஞர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர், கும்பகோணம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1937–1939

சைதாப்பேட்டை இந்தி எதிர்ப்பு மாநாடு!

-ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில், தமிழ்நாட்டில் நடைபெற்ற `முதலாவது இந்தி எதிர்ப்புப் போராட்ட'த்தின்போது, சைதாப்பேட்டையில் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் தலைமையில், மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இதில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கி.ஆ.பெ.விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார் மற்றும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் கலந்துகொண்டு, மொழிப்போர் படையின் தளபதிகளாக முன்னின்று போராட்டங்களை வழிநடத்தினர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900